**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.95/2022**

**Deposition of Witness for : P.W.3**

**Name :** திரு.சரவணன்

**Father's Name :** கண்ணையன்

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.11.2023.**

முதல் விசாரணை -

நான் விளை கிராமத்தில் வசிக்கிறேன். தறி வேலை செய்து வருகிறேன். அ.சா.2 பச்சையம்மாள் என்னுடைய மனைவி. புருஷோத்தமன் தெரியும். ஆஜர் எதிரி தெரியும். புருஷோத்தமன் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை.

இந்த வழக்கு பற்றி எனக்கு என்ன தெரியும் என்றால் இரண்டு வருடம் முன்பு புருஷோத்தமன் அவர் வீட்டு மாடியில் இருந்து சொன்னார்கள். நான் போய் பார்த்து எதிர்வீட்டில் உள்ளவர்களை எழுப்பினேன்.

பின்பு புருஷோத்தமன் அக்கா மாமாவிற்கு போன் செய்து வந்தவுடன் ஆம்புலன்சில் அனுப்பி வைக்கப்பட்டார். என் மனைவி பச்சையம்மாள் தான் எழுப்பினார். நான் பார்த்தபோது கீழே விழுந்து இருந்தார். தீக்காயம் சிறிது இருந்தது. தீக்காயங்கள் உடன் மேலிருந்து கீழே விழுந்திருப்பதை சத்தம் கேட்டு வந்து கீழே விழுந்திருந்ததை பார்த்து தெரிந்துக்கொண்டேன். மேலிருந்து கீழே விழுவதை பார்க்கவில்லை.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

19.10.2021 அன்று நான் பச்சையம்மாள் வீட்டில் டி.வி பார்த்துக்கொண்டு இருந்தோம். எங்கள் வீட்டிற்கும் புருஷோத்தமன் வீட்டிற்கு இடையில் காலி மனை. எங்கள் வீட்டில் நடப்பதும், புருஷோத்தமன் வீட்டில் எங்களுக்கும் புருஷோத்தமனுக்கும் தெரியும் என்றால் நாங்கள் வெளியில் வந்து பார்த்தால் தான் புருஷோத்தமன் வீட்டில் நடப்பது தெரியும்.

ஒரு நபர் மேலிருந்து விழும்போது அபய குரல் உடன் தான் விழுவார்கள் என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது. நான் மேலிருந்து கீழே விழுந்து கிடந்ததை மட்டும் தான் பார்த்தேன். விழுந்து கிடந்ததை என் மனைவி தான் சொன்னார். என் மனைவிக்கு சத்தம் கேட்டு தான் மேலிருந்து கீழே விழுந்ததை பார்த்து தான் என்னிடம் வந்து சொன்னார் என்றால் சரி தான்.

நாங்கள் போய் பார்த்தபிறகு தான் புருஷோத்தமன் மாமா குணசேகரனுக்கு போன் செய்தோம் என்றால் சரி தான். குணசேகரனுக்கு

போனில் என்ன தகவல் சொன்னோம் என்றால் புருஷோத்தமன் கீழே விழுந்து அடிப்பட்டு கிடக்கிறார் என்று சொன்னோம். குணசேகரன் வந்துவிட்டார் என்றால் சரி தான். அதன்பிறகு என்ன செய்தோம் என்றால் ஆம்புலன்ஸ் வரவழைத்து, ஆம்புலன்சில் குணசேகரனும் அவருடைய மனைவியும் சென்றார்கள். நாங்கள் எல்லாம் சேர்ந்து ஏற்றிவிட்டோம் என்றால் சரி தான். ஏற்றும்போது என்ன நிலையில் இருந்தார் என்றால் பேசும் நிலையில் இல்லை.

புருஷோத்தமனுக்கு எப்படி இருந்தார் என்றால் சட்டை, ஜீன்ஸ் பேன்ட் போட்டு இருந்தார். சட்டை எரிந்து இருந்ததை பார்த்தேன். ஜீன்ஸ் பேன்ட் எரிந்ததை பார்க்கவில்லை. புருஷோத்தமன் தான் அவர்கள் வீட்டில் பெரிய மகன். அடுத்து ரமேஷ் பிறகு எதிரி ராஜசேகர். அவர்களுக்குள் வீட்டு பிரச்சனை என்றால் அதெல்லாம் நடந்து முடிந்துவிட்டது. அதன்பிறகு என்ன பிரச்சனை என்று தெரியவில்லை.

புருஷோத்தமனுக்கும் ஆஜர் எதிரிக்கும் வீடு சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தநிலையில் புருஷோத்தமனை ஆஜர் எதிரி மாடியில் தூங்கிக்கொண்டு இருக்கும்போது பெட்ரோல் ஊற்றி எரித்ததில், அந்த எரிந்த நிலையில் புருஷோத்தமன் மாடியில் இருந்து கீழே விழுந்ததை நேரில் நானும் என் மனைவி, குமரேசன், சத்யானந்தன் மற்றும் சூர்யா ஆகியோர் பார்த்துவிட்டு சம்பவத்தை பற்றி தெரிந்தும், தற்போது எதிரியும் எங்கள் தெருவை சேர்ந்தவர் என்பதால் எதிரியை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இரவு 9.30, 10 மணிக்கு நாங்கள் சாப்பிட்டுவிட்டு வீட்டில்

படுத்துக்கொண்டு இருந்தோம் என்றால் சரி தான். எங்கள் வீட்டில் நான் என் மனைவி என் மகள் சூர்யா ஆகியோர் என்றால் சரி தான். என் வீட்டில் இருந்து பார்த்தால் யார் வீட்டில் என்ன நடந்தாலும் தெரியாது என்றால் சரி தான். சம்பவ காலம் அக்டோபர் மாதம் என்பதால் இரவு நேரம் இருட்டாக இருந்தது என்றால் சரி தான்.

கிராமத்தில் எல்லா வீட்டிலும் எல்லா விளக்கும் அணைத்துவிட்டு தான் படுப்பார்கள் என்றால் சரி தான். முதன்முதலில் கீழே விழுந்து கிடப்பதை என் மனைவி தான் பார்த்தார் என்றால் சரி தான். யார் என்றே தெரியாமல் தான் இருந்தார் என்றால் சரி தான். அவர் சொல்லி தான் நாங்கள் எல்லோரும் வந்தோம் என்றால் சரி தான். என் மனைவியும் புருஷோத்தமன் கீழே விழுந்ததை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரி தான்.

காலி மனையில் தான் புருஷோத்தமன் விழுந்துகிடந்தார் என்றால் சரி தான். காலி மனையில் நெல் அவிப்பதற்கும், மாட்டு தீவனத்திற்காகவும் அடுப்பு எரிந்துக்கொண்டு இருந்தது என்றால் சரி தான். நாங்கள் போய் பார்க்கும்போது சுயநினைவில்லாமல் தான் புருஷோத்தமன் இருந்தார் என்றால் சரி தான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.